hallo–ar.ch

Appenzell Ausserrhoden

# மொழியும் உள்வாங்குதல்

உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)
ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி
மொழி
டொச்மொழி கற்றல்

# உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)

வெளிநாட்டவர்கள் இங்குள்ள சமூகத்துடன் சேர்ந்து பழகி உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பொருளாதார ரீதியாகத் தம்மை நிலைநிறுத்தவும் டொச் பேசவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## முக்கியமான அடிப்படைக் கோட்பாடு

சுவிஸின் குடியிருப்பாளர்கள் கட்டாயமாக அரசியலமைப்பைக் (உ+மாக ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை) கவனத்தில் கொண்டு சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் அதைத்தவிர இயலுமானவரை பொருளாதார ரீதியாகத் தம்மை நிலை நிறுத்தவும் முயலவேண்டும். வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள் தாம் குடிபுகுந்த இடத்து மொழியைக் விரைவில் கற்க வேணடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒருங்கிணைவு என்பது இரு பக்கத்தினரும் தம் பங்களிப்பைச் செய்தால் மட்டுமே வெற்றியளிக்கும். அதனாலேயே இந்நாட்டு மக்கள் வெளிநாட்டவர்களுடன் திறந்தமனதுடன் பழக எதிர்பார்க்கப்படுகிறது.

## சுய பொறுப்பு

வெளிநாட்டவர்கள் பொருளாதாரம் சமூக கலாச்சாரத்தில் சரியான வழியில் சென்று பயனடைய வேண்டுமென மத்தியஅரசு, மாநில மற்றும் கிராமசபை அக்கறை காட்டுகிறது. வெளிநாட்டவர்கள் அவர்கள் தாமே சுயமாகச் செயற்படவும் உள்வாங்கலிற்குத் தம்மாலான முயற்சிகள் எடுக்கவும் வேண்டும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சமூக வாழ்க்கையில் பங்கெடுத்தல்

சுவிஸ் மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களைப் பழகிக் கொள்ள ஒரு சிறந்த வழி வகைகளை கழகங்கள் ஏற்படுத்துகின்றன. அதைவிட வதியும் கிராமசபைகளில் நடக்கும் விழாக்கள் நிகழ்ச்சிகள் கூட தொடர்புகளை ஏற்படுத்த உதவும். சுவிஸ் மக்கள் எல்லோரும் வெளிநாட்டுக் கலாச்சாரத்திற்கு திறந்த மனதைக் காட்டமாட்டார்கள் என்பதால் ஆரம்பம் சிலசமயம் கடினமாகத் தோன்றலாம். சில சமயம் விடாமுயற்சியும் தேவைப்படலாம்.

## தகவல்கள் / உதவிகள்

அப்பன்செல் அவ்சர்ஹோடன் காந்தோனில் புதிதாக வருவோருக்காக பல உதவிக்கருவிகள் உள்ளன. முதல் தொடர்புக்கு நல்ல இடம் உங்கள் வாழும் கிராமசபையாகும். இருப்பினும், குடியேறுபவர்களுக்காக குறிப்பிட்ட உதவிக்கருவிகளும் உள்ளன. Informationsstelle Integration, சுவிட்சர்லாந்தில் வாழ்வது பற்றிய தகவல்களை வழங்குகிறது மற்றும் பல்வேறு தலைப்புகளில் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறது. ஜெர்மன் பேசத் தெரியாதவர்கள் مترجم–ஐ (மொழிபெயர்ப்பாளர்) அழைத்து வரலாம் அல்லது مترجم–ஐ கோரலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/language-and-integration/integration

# ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி

ஒருங்கிணைப்பைப் பாடசாலைகளிலும் வேலையிடங்களிலும் காணலாம். மேற்குறிப்பிட்ட வசதிகள் கிடையாதவர்களுக்கு வேறும் பலவகையான ஒருங்கிணைப்பு வசதிகள் உள்ளன.

## முதன்மை தகவல்கள் மற்றும் சுருக்கமான தகவல்கள்

முதல் பேச்சில், INFI தகவல் நிலையம் புதியவர்கள் மீது தங்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் சுவிட்சர்லாந்து மற்றும் அப்பென்செல் ஆஸ்செர்ரோடன் பகுதியில் வாழ்வின் பற்றி தகவல் வழங்குகிறது. கல்வி, சுகாதாரம், வேலை, உரிமைகள் மற்றும் சமூக காப்பீடுகள் போன்ற தலைப்புகள் கையாளப்படுகின்றன. தனித்துவமான ஒருங்கிணைப்பு தேவைகள் இருந்தால், அதற்கேற்ற வாய்ப்புகள் மற்றும் தொடர்பு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.
**[illegible]?** எங்களை மின்னஞ்சல் மூலம் chancengleichheit@ar.ch அல்லது தொலைபேசியில் +41 71 353 64 26 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
மேலும், INFI குடியரசு மற்றும் குடியுரிமை தொடர்பான தினசரி கேள்விகளுக்கு விரைவு தகவல்களை வழங்குவதற்கான உதவிகளை வழங்குகிறது.
**[illegible]?** எங்களை மின்னஞ்சல் மூலம் chancengleichheit@ar.ch அல்லது தொலைபேசியில் +41 71 353 64 26 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## குறிப்பிட்ட வசதிகள்

சுவிஸ் சமூகத்துடன் ஒன்றிணைந்து கலந்துகொள்வதற்கும் தொடர்புகளை உருவாக்குவதற்கும் வெளிநாட்டவர்களுக்கு பல தனிப்பட்ட வாய்ப்புகள் உள்ளன. இவற்றில் விவாத குழுக்கள், ஓய்வு நேர செயல்பாடுகள், சொற்பொழிவுகள் அல்லது பாடநெறிகள் அடங்கும். Informationsstelle Integration INFI என்ற தொடர்பு நிலையம் அல்லது உங்கள் கிராமசபை இந்த வாய்ப்புகளைப் பற்றிய தகவல்களை வழங்கும். பல கிராமசபைகள் புதிய குடியிருப்பாளர்களுக்கு வரவேற்பு நிகழ்வை நடத்துகின்றன - ஒரு முதல் பார்வை கிடைக்கும் சிறந்த வாய்ப்பு.

## கழகங்கள்

அப்பென்செல் அவசர்ஹோடன் மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein) அங்கத்தவராயிருப்பார்கள்.பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

## இளையவர்களுக்கான வசதிகள்

அப்பென்செல் அவ்செர்ரோடன் மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. மேலதிக விபரங்களை அறிய கிராமசபைகளில் தொடர்புகொள்ளலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/language-and-integration/integration-programmes

# மொழி

அப்பென்செல் அவ்செர்ரோடன் மாநில டொச் மொழி பேசத் தெரியாத குடியிருப்பாளர்கள் டொச் மொழியைக் கற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மொழி அறிவு உள்ள நிலை சமூக உள்வாங்கலுக்கும் தொழில் சந்தையில் வெற்றியையும் தேடித்தரும்.

## உயர் டொச் மொழி / சுவிஸ் டொச் மொழி

சுவிஸில் 4 மொழிகள் பாவனையில் உள்ளன: டொச், பிரெஞ்ச், இத்தாலி, ரட் ரோமானிஸ். அப்பென்செல் அவ்செர்ரோடன் மாநிலத்தின் அரசாங்க மொழி டொச் ஆகும். உயர் டொச் மொழிக்கும் (Hochdeutsch) சுவிஸ் டொச் மொழிக்கும் (Schweizerdeutsch) வித்தியாசம் உண்டு. பாடசாலையிலும் பகுதிவாரியாக வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒரு பகுதியும் எழுத்துடொச் மொழி பேசுவார்கள். எழுத்து மொழியும் உயர் டொச்மொழியாகும். ஆயினும் அன்றாடப் பேச்சு மொழி சுவிஸ் டொச் ஆகும். அங்கே டொச்சில்; ஒரு பேச்சு வழக்கு மொழியைப் பயன்படுத்துவார்கள். இந்தப் பேச்சு வழக்கு நன்றாக டொச் தெரிந்தவர்களுக்கே எல்லாம் விளங்கிக் கொள்வது கடினம். வெளிநாட்டவர்கள் சுவிஸ் டொச் பேசவேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை ஆனாலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு அதை விளங்கிக் கொண்டாலே போதும். அதே வேளை சுவிஸ் மக்களை உயர் டொச் மொழி பேசச் சொல்லிக் கேட்கலாம்.

## டொச் மொழியும் பிள்ளைகளும்

வேற்று மொழி பேசும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளை இயலுமானவரை ஆரம்பம் தொட்டே டொச்மொழிபேசும் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள விடவேண்டும். இதற்காகவே விளையாட்டுக் குழுக்கள் அல்லது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான விசேட வசதிகள் உள்ளன. பிள்ளைகளுடன் அதிகம் பேசி அவர்கள் சொல்வதைக் கேட்டு கதைகள் சொல்வதன் மூலம் பெற்றோரும் பிள்ளைகளுக்கு உதவலாம். பெற்றோர் இலகுவாகப் பேசக்கூடிய மொழியிலேயே பிள்ளைகளுடன் பேசலாம்.

## மொழிபெயர்ப்புக்கள்

சுவிசுக்கு வந்தவுடனேயே டொச் நன்றாகப் பேசவும் விளங்கவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படமாட்டாது. இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் ஒருவர் தன்னை விளங்கவைக்கவேண்டிய சூழல் வரலாம். அநேகமான புதிதாக வந்தவர்கள் தமது உறவினர்களையோ அன்றி தெரிந்தவர்களையோ மொழிபெயர்க்கக் கூட்டிவருகின்றனர். பிரச்சனையான, தனிப்பட்ட அல்லது நம்பிக்கையான பேச்சுவார்த்தைக்கு ஒரு தொழில்முறை மொழிபெயர்ப்பாளரை வைப்பது நல்லது. பள்ளிகள், ஆலோசனை மையங்கள், மருத்தவர்கள் மற்றும் மருத்துவமனைகள் செ. காலேனில் உள்ள Arge Verdi நடுநிலைச் சேவையில் கலாச்சார மொழிபெயர்ப்பு சேவையைப் பதிவு செய்ய முடியும். நேரம் ஒதுக்கும்போது இதை கேட்கவும். இது உங்களுக்கு இலவசம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/language-and-integration/language

# டொச்மொழி கற்றல்

டொச் சரியாகப் படிக்கவேண்டுமானால் ஒரு டொச் வகுப்புக்குப் போவது பரிந்துரை செய்யப்படுகிறது. அப்பென்செல் அவ்செர்ரோடன் மாநிலத்தில் டொச் வகுப்புகள் பல வகை வாழ்க்கைச் சூழ் நிலைகளிலும் பரந்து சீரமைக்கப்பட்டுள்ளது.

## சலுகைகள்

அப்பன்செல் அவ்சர்ஹோடன் காந்தோனும் கிராமசபைகளும் ஜெர்மன் மொழி பாடங்களுக்கு ஒரு பகுதியின் செலவினைகளை பங்கிடுகின்றன. இதனால், இந்த பாடங்கள் பங்கேற்பாளர்களுக்கு மிகவும் மலிவாக இருக்கும்.
Weiterbildung Appenzeller Mittelland சங்கம் பின்வரும் ஜெர்மன் மொழி பாடங்களை உருவாக்குகிறது. இது A1 முதல் B2 வரை மொழித் நிலைகளில் நடைபெறுகின்றது.
2 முதல் 4 வயது வரை குழந்தைகளைக் கொண்ட பெண்கள், Aida I Bildung + Begegnung சங்கத்தின் மூலம், சென்ட் காளென் நகரில் மலிவான ஜெர்மன் மொழி பாடங்களைப் பதிவு செய்யலாம். பெண்கள் கற்றுக் கொண்டபோது, குழந்தைகள் குழந்தைகளுக்கான பாடத்தில் பங்கேற்கின்றனர். இதன் மூலம், குழந்தைகள் துவக்க காலத்தில் ஏற்கனவே ஜெர்மன் மொழியை கற்றுக் கொள்கின்றனர்.
INFI தகவல் அலுவலகம் அல்லது குடியேறிய கிராமசபை அதற்கான தகவல்களை வழங்குகிறது.

## மொழியின் தரம்

டொச் மொழியறிவின் ஒரு அளவுகோலாக ஐரோப்பிய குறிப்புச்சட்டகங்கள்" (GER)என வகுக்கப்படும். இதில் 6 அடுத்தடுத்த மொழியின் நிலைகள் A1(ஆரம்பம்) தொடக்கம் C2 (மிகவும் திறமையான மொழியறிவு )வரை உள்ளன. அதிகமான டொச்மொழி வகுப்புகள் இந்தப் படிகளிலே அமைக்கப்பட்டுள்ளன. நிலை A1 உம் A2 உம் டொச்மொழியின் அடிப்படை அறிவைக்காட்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி கற்க முயற்சி செய்ய விரும்பினால் அதிகமாக நிலை B1 உம் B2 உம் படித்திருக்கவேண்டும். C1உம் C2 படித்து மேம்பட்டவர்கள் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்கலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/language-and-integration/learning-german